செ.வெ.எண்: 28 15.10.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் புகைப்பட கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை லேணா திருமண மண்டபத்தில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகம், பூம்புகார் விற்பனை நிலையம், திருச்சி சார்பில் நடைபெற்று வரும் அகில இந்திய கைவினைப்பொருட்கள் சிறப்பு கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 14.10.2016 அன்று துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு செயல்படுத்திய திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் இந்த புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இந்த புகைப்பட கண்காட்சியில் தமிழகஅரசு பொதுமக்களின் நலனுக்காக செயல்படுத்தும் திட்டங்களான தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த புகைப்படங்களும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இடம்பெற்றுள்ளது. எனவே, இந்த புகைப்பட கண்காட்சி மூலம் பொதுமக்கள் தமிழக அரசின் அனைத்துத் திட்டங்களையும் அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.க.பிரபாகரன் (செய்தி), திரு.ரா.ராமசுப்பிரமணியன் (விளம்பரம்), திருச்சி பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் திருமதி.ஆர்.கங்காதேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**